ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/43 - 2017 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2017.02.17

*2006/43 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டம்***

ஒழுங்குவிதிகள்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தில் 42 ஆவது சரத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட 2017.02.03 ஆந் திகதிய 2004/66 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்தங்களுடன் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 42 (2) ஆம் சரத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டது என இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இலக்கம் 163,
கிருளப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொடை,
கொழும்பு 05,
2017 பெப்ரவரி 06.

**சீர்திருத்தங்கள்**

1. மேற்சொன்ன அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுள் 4ஆவது சரத்தின் (ii) ஆ பந்தி நீக்கப்பட்டு அதற்கு பதிலாக கீழுள்ள பந்தி மாற்றப்படுகின்றது.

(ஆ) லீகல் அளவிலான (Legal size) (21.59 செமீ x 35.56 செமீ) மற்றும் A3 (29.7 செமீ x 42 செமீ) அளவு வரையான காகிதத்தில் வழங்கப்படும் தகவல்களுக்கு 4 ரூபா (ஒரு பக்கம்) மற்றும் 8 ரூபா இரண்டு பக்கங்களும்).

2. ஒழுங்கு விதிகளுள் 33ஆவது சரத்தின் பின்னர் வருகின்ற இணைப்பு 1 முதல் இணைப்பு 5 வரை நீக்கப்பட்டு அதற்கு பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 1 முதல் 5 வரை மாற்றப்படுகின்றது.

*பின்னிணைப்பு 1*

**மேன்முறையீட்டின் வடிவம்**

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு**

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு,

..........................................................................................
..........................................................................................

**மேன்முறையீட்டுப் படிவம்**

1. மேன்முறையீடு செய்பவரின் பெயர்:...................................................
2. முகவரி:............................................
3. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : .......................................
4. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) : ...........................................
5. அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : ....................
6. சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபையின் பெயர்: .......................................
7. சம்பந்தப்பட்ட தகவல் அலுவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்): ...................
8. தகவல் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்த திகதியும் பதிவிலக்கமும்:.....................................................
(வேண்டுகோளின் பிரதியை இணைக்கவும்)
9. தகவல் அலுவலரிடமிருந்து உங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் /இல்லை : .............................................
(ஆம் எனில், பதிலின் பிரதியை இணைக்கவும்)
10. தகவல் அலுவலரிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி:..............................................................................
11. எந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிராக மேன்முறையீடு மேற்கொள்ளப்படுகின்றதோ அவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்: ................................................................................
12. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு மேற்கொண்ட திகதியும் மேன்முறையீட்டு இலக்கமும்:..................................
13. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் /இல்லை:.................................
(ஆம் எனில், தீர்மானத்தின் ஒரு பிரதியை இணைக்கவும்)
14. குறித்தளிக்கப்பட்ட அதிகாரசபையிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி: ..........................................
15. மேன்முறையீட்டுக்கான அடிப்படை : ......................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
.............................................
16. மேன்முறையீட்டில் கோரப்பட்ட தகவல் (விபரங்கள், காலப்பகுதி மற்றும் விடயம்):..........................................
17. கோரப்பட்ட தீர்மானம்: .......................................................................
18. மேன்முறையீடு குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படாவிடின், தாமதத்திற்கான காரணம் [பிரிவு 32(2)]:...........

19. இதே கருமம் தொடர்பாக ஆணைக்குழுவிடம் முன்னர் ஏதேனும் மேன்முறையீடு கோரப்பட்டதா?
20. வேறு ஏதேனும் தகவல் (தகவலுக்கான கோரிக்கை ஒரு பிரசையின் வாழ்க்கை மற்றும் சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா என்பது உள்ளடங்கலாக) : ..................................................................................
21. இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல் : ......................................................................................

திகதி: ...............................

ஒப்பம்:

*பின்னிணைப்பு 2*

**மேன்முறையீடுகளின் பதிவேடு**

| மேன் முறைட்டு இல. | மேன் முறையீடு பதிவு செய் யப்பட்ட திகதி | மேன்முறை யீட்டாள ரின் பெயரும் முகவரியும் | சட்டத் தின் பி. 24 இன் கீழ் முறைப் பாட்டைப் பெற்றுக் கொண்ட தகவல் அலுவல ரின் பெயரும் பதவியும் | சட்டத்தின் பி. 31 இன் கீழ் முறைப் பாட்டைப் பெற்றுக் கொண்ட குறித்தளிக் கப்பட்ட அலுவலரின் பெயரும் பதவியும் | தீர்மானத் தின் திகதி யும் தகவல் அலுவலரின் தீர்மானமும் | தீர்மானத் தின் திகதி யும் குறித் தளிக்கப் பட்ட அலு வலரின் தீர்மானமும் | மேன்முறயீட்டை விசாரிக்கும் ஆணையாளர்கள் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

*பின்னிணைப்பு 3*

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட குறைபாடான மேன்முறையீடுகளின் பதிவேடு**

| மேன்முறை யீட்டு இல. | குறைபாடான மேன்முறை யீடு கிடைத்த திகதி | மேன்முறை யீட்டாளரின் பெயரும் முகவரியும் | மேன்முறை யீட்டாளரிடம் குறிப்பிட்டவாறு மேன்முறை யீட்டில் உள்ள குறைபாட்டின் சுருக்கமான விபரம் | மேன்முறை யீட்டை திருப்பிக் கொடுத்த திகதி | மேன்முறை யீட்டைத் திருப்பிக் கொடுத்த விதம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

*பின்னிணைப்பு 4*

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு**

மேன்முறையீட்டாளருக்கான அறிவித்தல்

மேன்முறையீட்டுப் பதிவிலக்கம்: .................

..................................................................................

எதிர்.

..................................................................................

அனுப்புபவர்: தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
கொழும்பு

பெறுபவர்: ..................................................
..................................................................
..........................................

.................................. (முகவரி) யில் வதியும் ............................ என்பவரால் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு மேலே உள்ளவாறு இந்த ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாலும்.

அத்துடன் மேலே சொல்லப்பட்ட மேன்முறையீடு ஆணைக்குழுவினால்............................ (விசாரிக்கப்படும் இடம்) என்னுமிடத்தில் ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்படுவதாலும் /விசாரிக்கப்படுவதாலும்

அத்துடன் மேலே சொல்லப்பட்ட மேன்முறையீட்டின் பரிசீலனை /விசாரணை 20..................... ஆம் திகதி நடத்தப்படும் என்பதாலும்

எனவே இப்போது கீழ்வருமாறு கட்டளையிடப்படுகின்றது. குறிப்பு: கீழே உள்ளவற்றில் பொருத்தமற்றவற்றை அழித்து விடுக):

* ஆணைக்குழுவின் மேன்முறையீடுகள் பற்றிய ஒழுங்குவிதிகளின் 20 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் மேற்போந்த மேன்முறையீடு பற்றிய விசாரணையில் பங்குபற்றுவதற்கு விசாரணை மேற்கொள்ளப்படும் மேலே சொல்லப்பட்ட திகதியில் மு.ப./பி.ப. ........... மணிக்கு மேலே சொல்லப்பட்ட ஆணையாளரின் /ஆணையாளர்களின் முன்னிலையில் நேரடியாக (அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஊடாக) அல்லது ஒளித்தோற்ற மாநாட்டு வசதி ஊடாக (அந்த வசதி கிடைக்குமாயின்) சமுகமளிக்குமாறு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள். மேலே சொல்லப்பட்ட விசாரணைத் திகதிக்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் உங்கள் எழுத்திலான சமர்ப்பிப்புகளை (ஏதேனும் இருப்பின்) தாக்கல் செய்யுமாறு தாங்கள் பணிக்கப்படுகின்றீர்கள். ஆணைக்குழுவினால் அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபை அத்துடன் /அல்லது எவரேனும் சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பு(கள்) தமது ஆட்சேபனைக் கூற்றுகளைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

* மேன்முறையீடு பற்றிய ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளின் 19ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆவண ரீதியான நடவடிக்கைகளின் மூலமாக மேன்முறையீடு விசாரிக்கப்படும். தங்கள் எழுத்திலான சமர்ப்பிப்புகளை (ஏதேனும் இருப்பின்) மேலே சொல்லப்பட்ட ஆவணங்களின் பரிசீலனைத் திகதிக்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் மேலே சொல்லப்பட்ட தகவல் ஆணையாளருக்கு /ஆணையாளர்களுக்குக் கிடைக்கக்கூடியவாறு சமர்ப்பிக்குமாறு தாங்கள் பணிக்கப்படுகின்றீர்கள். ஆணைக்குழுவினால் அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபை அத்துடன் /அல்லது எவரேனும் சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பு(கள்) தமது ஆட்சேபனைக் கூற்றுகளைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

* மேன்முறையீடு பற்றிய ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆரம்ப மதிப்பீடு மூலமாக மேன்முறையீடு விசாரிக்கப்படும். இந்த அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் இந்த மேன்முறையீடு ஏன் தள்ளுபடிசெய்யப்படக்கூடாது என காரணம் காட்டுமாறு தாங்கள் பணிக்கப்படுகின்றீர்கள்.

* மேலே சொல்லப்பட்ட விசாரணை /பரிசீலனைத் திகதியில் தகவல் ஆணையாளரின் /ஆணையாளர்களின் முன்னிலையில் பின்வரும் ஆவணங்களை /பொருட்களைச் சமர்ப்பிக்குமாறு நீங்கள் பணிக்கப்படுகின்றீர்கள்:

................................................
................................................

மேலே குறிப்பிட்ட திகதியில் தாங்கள் தோற்றத் தவறின் தாங்கள் இல்லாமலே மேன்முறையீடு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

திகதி:

............................................
தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு/அதன் சார்பாக

**பின்னிணைப்பு 5**

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு**

பகிரங்க அதிகார சபை அத்துடன்/அல்லது மூன்றாம் தரப்புக்கான அறிவித்தல்

மேன்முறையீட்டுப் பதிவிலக்கம்:...........................

......................................................................

எதிர்.

......................................................................

அனுப்புபவர்: தகவலுக்கான உரிமை ஆணைக்குழு
கொழும்பு

பெறுபவர்: ...........................................
.............................................................
.............................................................

.............................(முகவரி) யில் வதியும் ......................... என்பவரால் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு மேலே உள்ளவாறு இந்த ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாலும்

அத்துடன் மேலே சொல்லப்பட்ட மேன்முறையீடு ஆணைக்குழுவினால் ................................ (விசாரிக்கப்படும் இடம்) என்னுமிடத்தில் ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்படுவதாலும் /விசாரிக்கப்படுவதாலும்

அத்துடன் மேலே சொல்லப்பட்ட மேன்முறையீட்டின் பரிசீலனை / விசாரணை 20..................ஆம் திகதி நடத்தப்படும் என்பதாலும்

எனவே இப்போது கீழ்வருமாறு கட்டளையிடப்படுகின்றது (குறிப்பு: கீழே உள்ளவற்றில் பொருத்தமற்றவற்றை அழித்து விடுக):

- * ஆணைக்குழுவின் மேன்முறையீடுகள் பற்றிய ஒழுங்குவிதிகளின் 20 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் மேற்போந்த மேன்முறையீடு பற்றிய விசாரணையில் பங்குபற்றுவதற்கு விசாரணை மேற்கொள்ளப்படும் மேலே சொல்லப்பட்ட திகதியில் மு.ப. /பி.ப. ............... மணிக்கு மேலே சொல்லப்பட்ட ஆணையாளரின் /ஆணையாளர்களின் முன்னிலையில் நேரடியாக சமுகமளிக்குமாறு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள். மேலே சொல்லப்பட்ட மேன்முறையீட்டின் ஒரு பிரதி ஆதரவான ஆவணங்களுடன் (ஏதேனும் இருப்பின்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல் கிடைத்த திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்குள் மேலே சொல்லப்பட்ட தகவல் ஆணையாளருக்கும் /ஆணையாளர்களுக்கும் மேன்முறையீட்டாளருக்கும் கிடைக்கக்கூடியவாறு ஆட்சேபனைக் கூற்றுகளை அத்துடன் /அல்லது ஏனைய ஆவணங்களை /ஆவணங்களின் ஒரு பட்டியலை (பிரதிகளின் எண்ணிக்கை) அத்துடன் உங்கள் எழுத்திலான சமர்ப்பிப்புகளை ஏக காலத்தில் சமர்ப்பிக்குமாறு பணிக்கப்படுகின்றீர்கள். ஆணைக்குழுவின் தற்றுணிபின் பிரகாரம், தகுந்தவாறு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மூலம் அல்லது ஒளித்தோற்ற மாநாட்டு வசதி ஊடாக (விசாரணை நேரத்தில் ஒளித்தோற்ற மாநாட்டு வசதி கிடைக்குமாயின்) சமுகமளிப்பதற்கு விதிவிலக்காக அனுமதிக்கப்படலாம்.

- * ஆணைக்குழுவின் மேன்முறையீடு பற்றிய ஒழுங்கு விதிகளின் 19 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆவண நடவடிக்கைமுறை ஊடாக மேன்முறையீடு விசாரிக்கப்படும். மேலே சொல்லப்பட்ட மேன்முறையீட்டின் ஒரு பிரதி ஆதரவான ஆவணங்களுடன் (ஏதேனும் இருப்பின்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆட்சேபனைக் கூற்றை அத்துடன் /அல்லதுஏனைய ஆவணங்களையும் அத்துடன் /அல்லது ஆவணங்களின் பட்டியலையும் (பிரதிகளின் எண்ணிக்கை)ஆணைக்குழுவையும் மேன்முறையீட்டாளரையும் இந்த அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் ஏக காலத்தில் அடையக்கூடியவாறும் ஆவணங்களைப் பரிசீலிக்கும் மேலே சொல்லப்பட்ட திகதிக்கு ஏழு நாட்களுக்குமுன்னர் எழுத்திலான சமர்ப்பிப்புகளையும் (ஏதேனும் இருப்பின்) சமர்ப்பிக்குமாறு தாங்கள் பணிக்கப்படுகின்றீர்கள்.

- * மேன்முறையீடு பற்றிய ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளின் 18 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆரம்ப மதிப்பீடு மூலமாக மேன்முறையீடு விசாரிக்கப்படும். தேவையெனின் இந்த அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களினுள் மேன்முறையீட்டுக்கான பதில்நடவடிக்கையாக ஏதேனும் ஆவணங்களைத் தாக்கல் செய்யுமாறு நீங்கள் பணிக்கப்படுகின்றீர்கள்.

- * மேலே சொல்லப்பட்ட விசாரணை /பரிசீலனைத் திகதியில் தகவல் ஆணையாளரின் /ஆணையாளர்களின் முன்னிலையில் பின்வரும் ஆவணங்களை /பொருட்களைச் சமர்ப்பிக்குமாறு நீங்கள் பணிக்கப்படுகின்றீர்கள்:

.........................................

.................................

மேலே குறிப்பிட்ட திகதியல் தாங்கள் தோற்றத் தவறின் தாங்கள் இல்லாமலே மேன்முறையீடு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

திகதி:

......................................

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு/அதன் சார்பாக.

3. ஒழுங்கு விதிகளுள் 7ஆவது சரத்தில் (i) உப சரத்தின் தொடர் பந்திகள்(i) (ii) (iii) நீக்கப்பட்டு அதற்கு பதிலாக கீழுள்ள (i) (ii) தொடர் சரத்துகள் மாற்றப்படுகின்றது.

(i) தகவல் அலுவலருக்கு செலுத்தும் பணமாக அல்லது,

(ii) பகிரங்க அதிகார சபையின் கணக்கீட்டு அலுவலருக்கு முகவரியிட்டனுப்பப்படும் வங்கிப் பணக் கொடுப்பாணை மூலமாக.

3- 146